[1975 மார்ச் 5]

நகராட்சிகளில் பணிபுரியும் கடைநிலை ஊழியர்கள்

*191 வினு—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நகராட்சியில் பணிபுரியும் பியூன், வாட்ச்மேன்களுக்கு அடிப்படைச் சம்பளம் உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை நகராட்சியிலே பணி புரியும் பியூன், வாட்ச்மேன்களுக்கு அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய், 18 ரூபாய் என்றுதான் இருக்கிறது. இவர்களது அடிப்படைச் சம்பளத்தை 100 ரூபாய் என்ற அளவிற்காவது உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பியூன் களின் சம்பளம் மாற்றப்பட்டாகிவிட்டது. இவர்களெல்லாம் வாட்ச்மேன்கள் என்ற அடிப்படையில் சர்க்காரின் எல்லாத் துறைகளிலேயும் வேலை செய்கிறார் கள். அவர்களுக்கு இப்பொழுது அந்த அடிப்படைச் சம்பளத்தைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்ற ஒரு தாக்கீது நம்முடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நான்காம் தர சிப்பந்தி கள் என்று சொல்லப்படும் பியூன், வாட்ச்மேன்கள் பல நகராட்சிகளிலே நிரந் தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு நிரந்தரமான சம்பளம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு நீண்டகாலமாக இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்களை யெல்லாம் நிரந் தரமற்ற ஊழியர்களாகவே அவசரச் செலவு நிதியிலிருந்து வேலைக்குச் சேர்த் துக் கொள்ளப்பட்டிருந்தால் நிர்ந்தரமற்றவர்களாக இருப்பார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதா என்ற பரிசீலனை இப்பொழுது சர்க்காரிடம் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சிப்பந்தி களை டெம்பரரியாக ஓராண்டு, இரண்டாண்டு வைத்துக் கொண்டு பிறகு நீக்கி விடுவது, மறுபடியும் 3 மாதம் கழித்து மீண்டும் எடுப்பது என்று

இப்படிச் செய்து சர்விஸ் இல்லாத அளவிற்கு பியூன்களுக்கும், வாட்ச்மேன் களுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கி 'லோயர் கிரேட் கிளார்க்'குக்கு உண்டான சம்பளம் வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இரண்டு பகுதிகளாக வேலைக்கு எடுக்கிறோம். முனிசிபாலிட்டிகளிலேயும், மற்ற நகரங் களிலேயும், சர்க்காரிலேயும் கூட சில ஸ்தாபனங்களில் டெம்பரரியாக புதிதாக வேலைக்கு எடுத்துச் செய்கிறோம். புதிதாக எஸ்டிமேட் போட்டு வேலை செய் தால் டெம்பரரியாக 3 மாதங்களுக்குத்தான் அந்த வேலையே இருக்கும். அப்படி அந்த வேலைகள் நடக்கும் நேரத்தில் டெம்பரரியாக வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவது என்றால் நிரந்தரமான காலி இடங்கள் வந்தால் நிரந்தரமாக்குவார்கள்.

Kothwal Market

* 192 *Q*.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal for providing a modern market in the place of Kothwal Market in George Town; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, கொத்தவால் சாவடியில் நெருக்கடி அதிகமாக இருப்பதால் இப்பொழுது 'ஸூ' அமைந்திருக்கும் இடத்தில் கொத்தவால் சாவடியைக் கொண்டு செல்லும் செயற்குறிப்பு இருந்ததாகவும், 'ஸூ'-வை வேறு இடத்திற்குக் கொண்டு போவதற்கான செயற்குறிப்பு இருந்த தாகவும் நான் அறிகிறேன். அப்படி இல்லையென்றாலும்கூட, கொத்தவால் சாவடியின் உள்ளே சென்று பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது, எனவே உடனடியாக கொத்தவால் சாவடியை நல்ல காற்றோட்டமுள்ள தாராள இட வசதி நிறைந்த இடத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப் பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அப்படி ஒரு யோசனை இருக்கிறது. கேசவ பிள்ளை பூங்காவில், 'சால்ட்குவாட்டர்ஸ்' பக்கத்தில் பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்த 46 இலட்சம் ரூபாயில் திட்டமிட்டு, எஸ்டிமேட் போடப்பட்டு அது பரிசீலனையில் இருந்து வருகிறது.